DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court,Uthukottai.

CC No. 5 Of 2018

Prosecution witness : LW- 11/ PW- 10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.பரந்தாமன் | Caste | : | |
| Father's Name | : | திரு.நடேசன் | Calling | : | Inspector of Police |
| Village | : | உத்திரமேரூர் | Religion | : | |
| Taluk | : | | Age | : | 54 |

(Accused called absent. Petition filed and allowed.)

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.10.2024

முதல் விசாரணை நேரம் 3.05

1. நான் தற்போது உத்திரமேரூர் ் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகின்றேன். நான் இவ்வழக்கின் விசாரணை அதிகாரி ஆவேன்.

2. இவ்வழக்கு சம்பவத்தின் போது ஊத்துக்கோட்டை காவல் நிலையத்தல் ஆய்வளாராக பணி செய்து வந்தேன். இவ்வழக்கை திரு மணிமனோகரன் என்பவர் கடந்த 27.08.2017-ம் தேதி மதியம் ் நிலையப்பொறுப்பில் இருந்தபோது தேவி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்ற எண் 440/2027 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கின் தன்மைக்கேற்ப இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 392, ஆகிய பிரிவின் கீழ் வழக்கு பதிவுசெய்து, மேல் விசாரணைக்காக என்னுடைய பார்வைக்கு வைத்தார்.

3. பின்பு இவ்வழக்கை விசாரணைக்கு நான் எடுத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு 27.8.2017 பகல் 2.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரவி, மற்றும் மணிகண்டன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார்செய்துள்ளார். பார்வை மகசர் அ.சா.ஆ14 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. மாதிரிவரைபடம் அ.சா.ஆ15 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.

4. சம்பவ இடத்தில் சாட்சிகள் தேவி,ரவி, பாபு, ஹரிபாபு ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார்.

5. பின்னர் எதிரியை வாகனதனிக்கையின்போது இவ்வழக்கின் எதிரிகளான சரவணன், ஜெயராஜ், மற்றும் சரத் ஆகியோர்கள் இருசக்கர வாகனத்தில் பதிவு எண் இல்லாமல் வந்ததால் சந்தேகத்தின்போரில் விசாரணை செய்தபோது அவர்கள் தனாக

முன்வந்து குற்றத்தை ஒப்புக்கொண்டனர். எனவே எதிரியை கடந்த 05.12.2017ம் ஆண்டு கைது செய்யப்பட்டது. எதிரிகள் 3வரும் தனாக முன்வந்து ஒப்புதல் வாக்கு மூலம் அளித்தார்கள். மேற்படி முதலாம் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் களவாடிய பொருட்களை மறைத்து வைத்திருக்கும் இடத்தை காண்பிப்பதாக முதலாம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் மேற்படி ஒப்புக்கொள்ளப்பட்ட பகுதி அ.சா.ஆ 16 என குறியீடு செய்யப்படுகின்றது.

7. மேற்படி இரண்டாம் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் களவாடிய பொருட்களை மறைத்து வைத்திருக்கும் இடத்தை காண்பிப்பதாக இரண்டாம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் மேற்படி ஒப்புக்கொள்ளப்பட்ட பகுதி அ.சா.ஆ 17 என குறியீடு செய்யப்படுகின்றது.

8. மேற்படி மூன்றாம் எதிரி ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் களவாடிய பொருட்களை மறைத்து வைத்திருக்கும் இடத்தை காண்பிப்பதாக மூன்றாம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் மேற்படி ஒப்புக்கொள்ளப்பட்ட பகுதி அ.சா.ஆ 18 என குறியீடு செய்யப்படுகின்றது.

9. இவ்வழக்கில் முதலாம் எதிரியிடம் இருந்து பதிவுஎண் இல்லாத பல்சர் மோட்டார் வாகனம் Chasis No: M02A13EZ5GCA31857 Engine No: DKZCGA 01336 என்ற வாகனத்தினை சாட்சிகள் திரு. வசந்த் மற்றும் திரு. கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரின் மூலம் கைப்பற்றப்பட்டு மற்றும் மேற்படி சாட்சிகளின் வாக்குமூலமும் பதிவு செய்யப்பட்டது. மேற்படி கைப்பற்றுதல் மகசர் அ. சா.ஆ19 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. மேலும் ஆதே சாடசிகள் முன்னிலையில் முதலாம் எதிரிகளிடமிருந்து வெந்திய வகையை சார்ந்த தங்க சங்கலி 3 சவரன், தாலிபொட்டு 3 கிராம், சின்ன சின்ன பொட்டு தாலி 2 கிராம், லட்சுமி பொட்டு 1/4 சவரன், வாழைசீப்பு தங்க நகை 900மில்லிகிராம், குண்டுவகைகள் (8எண்ணிக்கை), 1.100கிராம் ஆகியவை முதலாம் எதரியின் வீட்டின் பின்புறம் இருந்து கைப்பற்றுதல் மகசரின் மூலம் கைப்பற்றப்பட்டது. மேற்படி கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.20 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. மேற்படி சான்று பொருட்கள் அனைத்தும் சா.பொ.1 ஆக அ.சா.ஆ. 1ன் மூலம் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்களான சா.பொ 1 பொருட்களை படிவம் 95 மூலமாக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு வழக்கு சொத்து எண் 101-2017 ஆக பெறப்பட்டது. மேற்படி படிவம் 95 அ.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரி கேட்டுக்கொண்டதற்கு இணங்க முதன்மை விசாரணை தொடர்ச்சி 07.11.2024 அன்று ஒத்திவைக்கப்படுகின்றது.